செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
40, சாலைப் போக்குவரத்து நிறுவன வளாகம், நூறடிச் சாலை, தரமணி, சென்னை – 600113
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under Ministry of Education, Government of India)
40, IRT Campus, 100 Feet Road, Taramani, Chennai - 600113
Website : www.cict.in E-Mail : director@cict.in
Phone : 044 - 22540124

# திருக்குறள் மொழிபெயர்ப்புகள்

நடுவண் கல்வி அமைச்சகம் திருக்குறளை இந்திய அரசமைப்பின் எட்டாவது அட்டவணையில் உள்ள 21 மொழிகளில் மொழிபெயர்க்கும் திட்டத்தினைச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் ஏற்கனவே பஞ்சாபி (2012), மணிப்புரி (2012), தெலுங்கு (2014), கன்னடம் (2014), குஜராத்தி (2015) ஆகிய மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்ப்புகளை வெளியிட்டுள்ளது. மேலும், திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்புகளின் தொகுப்பையும் (A Compendium of Tirukkuṟaḷ Translations in English) மூன்று பாகங்களாக வெளியிட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக அக்டோபர் 2021இல் பின்வரும் மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்ப்புகள் வெளியிடப்படவுள்ளன.

1. மலையாளம்
2. மராத்தி
3. ஒடியா
4. இந்தி
5. நேபாளி
6. உருது
7. அரபி
8. பாரசீகம்
9. வாக்ரிபோலி (நரிக்குறவர் மொழி)
10. படுகு